படிவம் - 3

## விண்ணப்பதாரருக்குதகவல் அளிக்கும் படிவம்
## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ்

***

48

எண். 1208/மி.து/செ.பொ.பொது/P&M/த.அ.ச./2023-24 நாள்: 19 .03.2024

**விடுநர்:**
செயற்பொறியாளர் - பொது மற்றும்
பொது தகவல் அதிகாரி,
மின்துறை,
புதுச்சேரி -605001.

**பெறுநர்:**
கோ. அழகர்,
த/பெ. கோபால்,
எண்.37-F, திருவள்ளுவர் வீதி,
அம்பேத்கர் சாலை,
முதலியார் பேட்டை, புதுச்சேரி-605004.
கைபேசி 9443211407

ஐயா

பொது தகவல் அதிகாரிக்கு அனுப்பப்பட்ட தங்களின் 26.02.2024 தேதியிட்ட தகவல் அறியும் உரிமை சட்ட விண்ணப்பத்தின்படி தெரிவிப்பது என்னவெனில், தாங்கள் கோரியுள்ள தகவல்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19-ன் படி மேல் முறையீடு செய்ய விரும்பினால் இத்துறையின் கண்காணிப்பு பொறியாளர்-மற்றும்-துறைத்தலைவர் அவர்களுக்கு இக்கடிதம் கண்ட 30 நாட்களுக்குள் விண்ணப்பம் செய்யலாம். அவரது முகவரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

திரு. T. சண்முகம்,
மேல் முறையீட்டு அதிகாரி மற்றும் கண்காணிப்பு பொறியாளர்-துறைத்தலைவர்,
எண்.137, நேத்தாஜி சுபா சந்திரபோஸ் சாலை,
மின்துறை, புதுச்சேரி - 605 001.

19/3/24

பொதுதகவல் அதிகாரி மற்றும்
செயற்பொறியாளர் - பொது

இணைப்பு

| | | |
|---|---|---|
| (i) | புதுச்சேரி அரசு மின்துறையானது பொதுமக்கள் மாதாந்திர மின் பயனீட்டுப் பட்டியலில் மின்விலை ஈடுகட்டுதல்-கீழ மின்நுகர்வோரிடமிருந்து எந்த ஆண்டில் இருந்து பிரதி மாதம் வசூலிக்கப்படுகிறது? அந்த தொகை எந்த கணக்கில் இருப்பு வைக்கப்படுகிறது? விபரம் மாதம் வாரியாக வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் இதுவரை இருப்பில் உள்ள மொத்த தொகை விபரங்களை உரிய ஆவணங்களின் நகலுடன் வழங்கிட கோருகிறேன். | மின்விலை ஈடுகட்டும் கட்டணங்கள் 2012-13ஆம் ஆண்டிலிருந்து தேவை ஏற்படும் போது நுகர்வோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை மின்துறையின் கருவூலக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதன் முழு கணக்கு விபரங்கள் https://jercuts.gov.in என்ற இணையதளத்தில் புதுவை மின்துறையின் ஆண்டுதோறும் சமர்பிக்கப்படும் மின் கட்டண நிர்ணய விண்ணப்படிவத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| (ii) | புதுச்சேரி அரசு மின்துறை "மின்விலை ஈடு கட்டுதல் தொகை எந்த சட்டப்பிரிவின் கீழ் வசூலிக்கப்படுகிறது? அரசு மற்றும் தனியாரிடமிருந்து வரவேண்டிய மின்வரி பாக்கி தொகையில் ஈடுகட்ட வசூல் செய்யப்படுகிறதா? ஆம் எனில் அதற்கான விளக்க கடிதம் வழங்கிடுக. | மின் கட்டண பில்லில் குறிப்பிடப்பட்டுள்ள FPPCA charges முற்றிலும் இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதல் பேரில் நிர்ணயிக்கப்படுகிறது. மின்சாரம் வாங்கும் விலை மற்றும் மற்ற செலவினங்களின் அடிப்படையில், வருடாந்திர மின் கட்டணத்தை இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தீர்மானிக்கின்றது. இருப்பினும், ஒரு வருடத்திலேயே மின்சாரம் வாங்கும் விலை உயரும்போது, அந்த அதிகப்படி விலையை 'எரிபொருள் மற்றும் மின்சாரம் வாங்கும் விலையை சரிசெய்தல்' என்ற முறையின் மூலம் காலாண்டு அடிப்படையில் வசூலிக்க இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் எரிபொருள் மற்றும் மின்சார கொள்முதல் விலை வழுங்கல் மற்றும் தேவையைப் பொறுத்து மாறுபடும். இதன் விளைவாக மின் உற்பத்தி செலவு மாறுபடும். எனவே, இந்த கூடுதல் செலவுகள் மின்சார உற்பத்தி நிறுவனங்கள் மின்துறையிடம் பெறப்பட்டு அதன் பின் மின் நுகர்வோர்/வாடிக்கையாளர்களிடம் வசூலிக்கப்படுகிறது. இது பயன்படுத்தப்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் மதிப்பிடப்படும் கட்டணமாகும். மாதாமாதம் மாறக்கூடியது. மின் நுகர்வோரின் அதற்குறிய மாதாந்திர பயன்பாட்டைப் பொறுத்து FPPCA கட்டணம் ஒவ்வொரு மாதமும் மாறுபடும். |
| (iii) | புதுச்சேரி அரசு மின்துறை "மின்விலை ஈடு கட்டுதல் தொகையை புதுவை நகர் முழுவதும் மாலை முதல் காலை வரை எரியும் தெரு மின் விளக்குகளுக்கான மின்வரிக்காக பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதை தெளிவாக வழங்கிடுக. | தெரு மின் விளக்குகளுக்காக 'மின் விலை ஈடுகட்டுதல்' தொகை வசூலிக்கப்படுவதில்லை. |
| (iv) | அதேபோல் மின்துறை மூலம் ஒவ்வொரு மின் நுகர்வோரிடமிருந்தும் நிரந்தர சேவைக் கட்டணம் பிரதி மாதம் பெறப்படுகிறது. இது அந்தந்த மின்பயனீட்டாளர் பெயரில் இருப்பு வைக்கப்படுகிறதா? ஆம் எனில் எந்த ஆண்டிலிருந்து இது வசூலிக்கப்படுகிறது என்பதையும், 2023-டிசம்பர் மாதம் வரை எவ்வளவு தொகை மொத்தமாக வசூலிக்கப்பட்டது என்பதையும், விபரமாக வழங்கிடுக. | நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படும் நிரந்தர சேவைக்கட்டணம் மின்துறையின் கருவூலக் கணகில் வரவு வைக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் நுகர்வோர் கணக்கில் வைக்கப்படுவதில்லை. இத்தகை நிரந்தர சேவைக் கட்டணம் பல ஆண்டுகளாக நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இதன் முழு கணக்கு விபரங்கள் https://jercuts.gov.in என்ற இணையதளத்தில் புதுவை மின்துறையின் ஆண்டுதோறும் சமர்பிக்கப்படும் மின் கட்டண நிர்ணய விண்ணப்படிவத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| (v) | ஒவ்வொரு மாதமும் மின்பயனீட்டாளர்கள் பாலிசியில் பெயர் மாற்றம் செய்கின்றனர். அவ்வாறு செய்யும் போது ஏற்கனவே உள்ள மின்பயனீட்டாளர் பெயரிலிருந்து ஆவணஙகள் மூலமாக தற்போது அவ்விடத்தில் வசிக்கும் மின் பயனீட்டாளர் பெயரில் பெயர் மாற்றம் பெற்ற பின்னர் பெயர் மாற்றம் செய்தவர்கள் பெயரில் ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொகை சேர்க்கப்படுகிறதா? அல்லது வசூலிக்கப்பட்ட தொகை ஏற்கனவே வசித்த மின்பயனீட்டாளர் பெயரில் தான் இருப்பு இருக்குமா? அது எந்த கணக்கில் சேர்க்கப்படுகிறது, விபரம் தருக. | முந்தைய உரிமையாளரின் தனிப்பட்ட ஒப்புதல் பெற்றால் மட்டுமே பாலிசி வைப்புத்தொகை புதிய உரிமையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும். |

19/3/24

பொதுதகவல் அதிகாரிமற்றும்
செயற்பொறியாளர் - பொது

6/4

OFFICE OF THE AEE (P&M) CUM PRO
ELECTRICITY DEPARTMENT
RECEIPT No: 1208 DATE: 28/02/24

OFFICE OF THE DIVISION-X ELECTRICITY DEPARTMENT
No. 3977
Dt. 27-02-2024
PONDICHERRY

படிவம்-1

## தகவல் அறிவும் உரிமைச் சட்டம் - 2005-ன் கீழ் தகவல் பெறும் விண்ணப்பம்.

பெறுநர்

பொது தகவல் அலுவலர்,
உயர்திரு. தலைமை மின்பொறியாளர் அவர்கள்,
மின்துறை தலைமை அலுவலகம்,
புதுச்சேரி-605 001.

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | : | கோ. அழகர்,<br>த/பெ. கோபால் |
| விண்ணப்பதாரரின் முகவரி | : | எண்.37-F, திருவள்ளுவர் வீதி,<br>அம்பேத்கர் சாலை, முதலியார்பேட்டை,<br>புதுச்சேரி-605 004.<br>கைப்பேசி 94432 11407 |
| தகவலின் விபரம் | : | தங்கள் துறை சார்பாக பொதுமக்களிடமிருந்து மாதாந்திர மின் பயனீட்டுப் பட்டியலில் "மின்விலை ஈடுகட்டுதல்"(FPPCA Charges) படி ஒவ்வொரு மின் நுகர்வோரிடமிருந்தும் பிரதி மாதம் வசூலிக்கப்படும் தொகை தொடர்பாக. |
| கோரப்படும் தகவல்களின் விபரம். | : | கேட்கப்படும் தகவல் தனித்தாளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| விண்ணப்பதாரர் கேட்கும் தகவலை எவ்வாறு பெற விரும்புகிறார்? | : | உரிய ஆதாரங்களுடன் அஞ்சல் மூலமாக |
| கேட்கப்படும் தகவல்களின் கால அளவு | : | 2023-டிசம்பர் முடிய |
| மற்றவை | : | தங்களின் தகவல் கிடைத்த பிறகு |

(ரூபாய் பத்து மட்டும்)) 10-ரூபாய் கோர்ட் ஸ்டாம்பு ஒட்டப்பட்டுள்ளது.

தேதி: 26.02.2024

இடம்: புதுச்சேரி.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

Pl. Spk AEE/P&M

JE/P&M 28/2/24

JE/P&M Reply as per FPPCA Paper notice may be put up 6/3/24

## இணைப்பு-1

1) புதுச்சேரி அரசு மின்துறையானது பொதுமக்கள் மாதாந்திர மின் பயனீட்டுப் பட்டியலில் **மின்விலை ஈடுகட்டுதல்**-கீழ் மின்நுகர்வோரிடமிருந்து எந்த ஆண்டில் இருந்து பிரதி மாதம் வசூலிக்கப்படுகிறது? அந்த தொகை எந்த கணக்கில் இருப்பு வைக்கப்படுகிறது? விபரம் மாதம் வாரியாக வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் இதுவரை இருப்பில் உள்ள மொத்த தொகை விபரங்களை உரிய ஆவணங்களின் நகலுடன் வழங்கிட கோருகிறேன்.

2) புதுவை அரசு மின்துறை "**மின்விலை ஈடு கட்டுதல் தொகை** எந்த சட்டப்பிரிவின் கீழ் வசூலிக்கப்படுகிறது? அரசு மற்றும் தனியாரிடமிருந்து வரவேண்டிய மின்வரி பாக்கி தொகையில் ஈடுகட்ட வசூல் செய்யப்படுகிறதா? ஆம் எனில் அதற்கான விளக்க கடிதம் வழங்கிடுக.

3) புதுவை அரசு மின்துறை "**மின்விலை ஈடு கட்டுதல் தொகை**யை புதுவை நகர் முழுவதும் மாலை முதல் காலை வரை எரியும் தெரு மின் விளக்குகளுக்கான மின்வரிக்காக பொதுமக்களிடமிருந்து இவ்வாறு வசூலிக்கப்படுகிறதா என்பதை விபரமாக வழங்கிடுக. அவ்வாறு இல்லையெனில் எதன் அடிப்படையில் இந்த தொகை பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதை தெளிவாக வழங்கிடுக.

4) அதேபோல் மின்துறை மூலம் ஒவ்வொரு மின் நுகர்வோரிடமிருந்தும் நிரந்தர சேவைக் கட்டணம் பிரதி மாதம் பெறப்படுகிறது. இது அந்தந்த மின்பயனீட்டாளர் பெயரில் இருப்பு வைக்கப்படுகிறதா? ஆம் எனில் எந்த ஆண்டிலிருந்து இது வசூலிக்கப்படுகிறது என்பதையும், 2023-டிசம்பர் மாதம் வரை எவ்வளவு தொகை மொத்தமாக வசூலிக்கப்பட்டது என்பதையும், விபரமாக வழங்கிடுக.

5) ஒவ்வொரு மாதமும் மின்பயனீட்டாளர்கள் பாலிசியில் பெயர் மாற்றம் செய்கின்றனர். அவ்வாறு செய்யும் போது ஏற்கனவே உள்ள மின்பயனீட்டாளர் பெயரிலிருந்து ஆவணங்கள் மூலமாக தற்போது அவ்விடத்தில் வசிக்கும் மின் பயனீட்டாளர் பெயரில் பெயர் மாற்றம் பெற்ற பின்னர் பெயர் மாற்றம் செய்தவர்கள் பெயரில் ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொகை சேர்க்கப்படுகிறதா? அல்லது வசூலிக்கப்பட்ட தொகை ஏற்கனவே வசித்த மின்பயனீட்டாளர் பெயரில் தான் இருப்பு இருக்குமா? அது எந்த கணக்கில் சேர்க்கப்படுகிறது. விபரம் தருக.

புதுச்சேரி
தேதி: 26.02.2024

விண்ணப்பதாரர் கையொப்பம்.